விழுப்புரம் மாவட்டம் கடற்கரை ஒட்டி உள்ள மரக்காணம் ஒன்றியம் மரக்காணம் உள்ளிட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு சார்பில் செய்துள்ள முன்னேற்பாடுகளையும்,பேரிடர் மீட்பு உபகரணப் பொருட்களை வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி மஸ்தான், அன்னியூர் சிவா, மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன், மரக்காணம் ஒன்றியக் குழு பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு

# முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு - நிவாரண பொருட்கள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர் அக். 17

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை பத்திரமாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளது இந்நிலையில் கடம்பத்தூர் ஒன்றியம் அதிகத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, காந்திகிராமம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குமாரகுப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, செருக்கனூர் மதுராபங்களாமேடு டியூசன் சென்டர் ஆகிய பள்ளிகளில் தங்கி உள்ள பொதுமக்களுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சந்தித்து உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார். பின்னர் அமைச்சர் தெரிவிக்கையில்,

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 2024 பல்வேறு கட்ட வெள்ளத் தடுப்பு முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகின்றன மழையினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை அழைத்து வரப்பட்டு பாதுகாப்பாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன இதுவரை 62 முகாம்களில் 1086 குடும்பங்களைச் சேர்ந்த 2999 இதில் 998 ஆண்களும் 1220 பெண்களும் 781 குழந்தைகளும் அடங்குவார்கள் அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் நிவாரண பொருட்கள் பாய், போர்வை மற்றும் மருத்துவ உபகரணங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுக்கிணங்க வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகம் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த. பிரபு சங்கர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, மாவட்ட கண்காணிப்பாளர் ப.முருகேஷ். தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை.ஜெயக்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் கற்பகம், தீபா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வாசுதேவன் மலர்விழி, மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய நகர செயலாளர்கள் கே.அரிகிருஷ்ணன், சி.சு.ரவிச்சந்திரன், வி.வினோத்குமார், ஆர்த்தி ரவி, பொன்.பாண்டியன், டி.மோதிலால், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

### சென்னையில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# திருக்கோயில்கள் சார்பில் உணவுப் பொட்டலங்கள்!

சென்னை, அக். 17 -

சென்னையில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை ஆளுகைக் குட்பட்ட திருக்கோயில்கள் சார்பில் நேற்று (16.10.2024) உணவுப் பொட்டலங்கள் தயாரித்து வழங்கப்பட்டன.

வடகிழக்கு பருவமழை மற்றும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக சென்னையில் பெய்து வரும் கனமழையை தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மூலம் தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னை மண்டலங்களைச் சேர்ந்த திருக்கோயில்கள் சார்பில் இன்று காலை முதல் உணவு பொட்டலங்கள் தயாரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி திருக்கோயில், கந்தக்கோட்டம் முத்துக்குமார சுவாமி திருக்கோயில் சென்னை, வடபழனி, ஆண்டவர் திருக்கோயில், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், வில்லிவாக்கம் அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், பாடி, திருவாலீஸ்வரர் திருக்கோயில், கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில், அமைந்தக்கரை ஏகாம்பரேஸ் வரர் திருக்கோயில், திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் திருக்கோயில், வேளச்சேரி தண்டீஸ்வரர் திருக்கோயில், சைதாப்பேட்டை காரணிஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் சார்பில் இன்று காலை 5,000க்கும் மேற்பட்ட உணவு பொட்டலங்கள் தயார் செய்யப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன.

இப்பணிகளை சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் இணை ஆணையர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி ஒன்றியம் திருமணம் ஊராட்சியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி நேரில் சென்று பொதுமக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார். அருகில் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு துணை பெருந்தலைவர் டி.தேசிங்கு, தாசில்தார் கோவிந்தராஜ் வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன் ஒன்றிய கவுன்சிலர் ஜெயஸ்ரீ மகா, நிர்வாகிகள் ஜெ.சாக்ரடீஸ், கட்டதொட்டி எம்.குணசேகரன், ஜி.சுகுமாரன், இ.பிரதீப், ஜி.பிரவீன் குமார், டி.மணிவண்ணன்,ராஜேஷ், சிபி சக்கரவர்த்தி கார்த்திக், உள்பட பலர் உள்ளனர்

திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகதிருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் மின் மோட்டார், இயந்திர உப கரணங்கள், பணியாளர்களுக்கு மழை கோட், கொசு வலை, இயந்திரம், மரம் வெட்டும் இயந்திரம், ஜெ.சி.பி. இயந்திரம், லாரி, டிராக்டர் போன்றவை தயார் நிலையில் உள்ள ஏற்பாடுகளை பார்வையிட்டு சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உடனடியாக நிவாரண பொருட்கள் மற்றும் அவர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்திவசிய பொருட்கள் வழங்குவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார். உடன் திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், திருவள்ளூர் நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் திருநாவுக்கரசு உள்பட நகர் மன்ற உறுப்பினர்கள் நகராட்சி துறை அதிகாரிகள் பலர் உள்ளனர்.

### பொதுமக்களிடமிருந்து பெறப்படும் அனைத்து மனுக்களின் மீதும்

# தீர்வு காண அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

## வருவாய்த்துறை அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம், அக். 17-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து வருவாய்த்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் 15.10.2024 அன்று மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குப்பின் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது அதிக முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றிட அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், அவர்களுக்கான அரசு நலத்திட்ட உதவிகள் சென்று சேருவதை உறுதி செய்யும் வகையில் ஆய்வுக் கூட்டங்களும் நடத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், சேலம் மாவட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து வருவாய்த்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்றையதினம் நடத்தப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் கடந்த 2021 மே மாதம் முதல் தற்போது வரை வருவாய்த்துறையின் மூலம் நத்தம் நிலவரித்திட்டம், இலவச வீட்டுமனைப் பட்டா, மாற்றுத்திறனாளிகளுக்கானஇலவசவீட்டுமனைப் பட்டா, ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினருக்கான பட்டா என மொத்தம் 27,081 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று, பட்டாக்கள் வேண்டி பொதுமக்கள் வழங்கிய பல்வேறு கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உட்பிரிவு மற்றும் உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் தொடர்பாக வரப்பெற்ற மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, பட்டா கோரி பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது எவ்வித காலதாமதமும் இன்றி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் பல்வேறு இனங்களில் 2,10,373 நபர்களுக்கு ஓய்வூதியங்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று, ஓய்வூதியங்கள் வேண்டி வழங்கப்பட்டுள்ள நிலுவை மனுக்கள் மீதும் விரைந்து தீர்வுகாண அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 14 வட்டங்களில் மொத்தம் 5,49,268 மகளிர் இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000/ பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே விண்ணப்பித்து சரிபார்ப்பில் உள்ள விண்ணப்பங்கள் குறித்தும், மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் குறித்தும், நிலுவையில் உள்ள மேல்முறையீடுகள் குறித்தும் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

முதல்வரின் முகவரித் துறையின் வாயிலாக சேலம் மாவட்டத்தில் வரப்பெற்ற 3,88,733 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, தகுதியின் அடிப்படையில் 2,33,483 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மீதமுள்ள மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேபோன்று, சேலம் மாவட்டத்தில் நகர்புறங்களில் 18.12.2023 முதல் 06.01.2024 வரை 142 மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு 54,337 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அனைத்து தகுதியான மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டு, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேலும், கிராமப்புறங்களில் 11.07.2024 முதல் 06.08.2024 வரை நடைபெற்ற 92 மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் மூலம் 43,111 மனுக்கள் பெறப்பட்டு அனைத்து தகுதியான மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளன. அதேபோன்று, கடந்த மூன்றரை ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் 84,061 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அனைத்துத்தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, மாவட்ட ஆட்சியரகத்தில் நடத்தப்படும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவரின் மக்கள் சந்திப்பு திட்ட முகாம், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு இனங்களில் பெறப்படும் அனைத்து கோரிக்கை மனுக்களின் மீதும் தொடர்புடைய அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான மனுக்களுக்கான தீர்வுகளை வழங்கிட இக்கூட்டத்தின்போது அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி ஆக்ரிதி சேத்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி அ.மயில், வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி அ.அபிநயா, திருமதி ந.லோகநாயகி, திருமதி தா. பிரியதர்ஷினி, துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி ஆர்.மாருதிபிரியா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் தலைமையில் உத்திரமேரூர் தொகுதி

# களியாம்பூண்டி ஊராட்சியில் 25 இருளர் குடும்பங்களுக்கு நல உதவிகள் - உணவு!

## அமைச்சர் ஆர்.காந்தி – க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினர்! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், அக். 17 -

காஞ்சிபுரம் மாவட்டம் - உத்திரமேரூர் ஒன்றியத்தில் மழையால் பாதிக்கப்பட்ட இருளர் குடும்பங்களை சந்தித்து நிவாரணப் பொருட்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஆகியோர் ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன் தலைமையில் வழங்கினர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்தில் உள்ள களியாம்பூண்டி ஊராட்சியில் கடந்த இரண்டு தினங்களாக பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட 25 இருளர் குடும்பங்கள் அந்த பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டிடத்தில் அரசுத்துறை அதிகாரிகள் தங்க வைக்கப்பட்டு உணவு வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் உத்திரமேரூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் பாய், பெட்ஷீட், பிரட், பிஸ்கட் ஆகியவை வழங்கும் நிகழ்ச்சி நேற்று (16.10.2024) காலை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல் ஏ தலைமையில் நடைபெற்றது.

அதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இருளர் குடும்பங்களை சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து நிவாரண பொருட்களை வழங்கி மதிய உணவு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து சில தினங்களுக்கு முன்பு மின்சாரம் தாக்கி இறந்தவரின் குடும்பத்திற்கு நான்கு லட்சம் காசோலையினை வழங்கினார்.

மேலும் இதே போன்று வயலூர் கிராமத்தில் மழையால் பாதிக்கப்பட்டு அரசு பள்ளியில் தங்க வைக்கப்பட்டிருந்த 50 இருளர் குடும்பங்களைச் சார்ந்தவர்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டு அறிந்து நிவாரண பொருட்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சார் ஆட்சியர் ஆஷக் அலி, ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன், செயற்குழு உறுப்பினர் இரா. நாகன், பேரூர் செயலாளர் என். எஸ். பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் எஸ். சசிகுமார், மாவட்ட கவுன்சிலர் பத்மா பாபு, கவுன்சிலர் அண்ணாதுரை ,ஊராட்சி மன்ற தலைவர்கள் வளர்மதி சுதாகர், கீதா உதயகுமார், கிளை செயலாளர் சிவகுமார் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் வடகிழக்கு பருவமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு அரசின் சார்பில் உணவு தயாரிக்கப்படும் மையத்தை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை நிலைக்குழு தலைவர் க.தனசேகரன் பார்வையிட்டு அதிகாரியுடன் ஆலோசனை செய்து துரிதமாக பொது மக்களுக்கு வழங்கிடுமாறு ஆலோசனை கூறினார். இதில் மாநகராட்சி அதிகாரிகள் கருணாகரன், திருமதி வெண்ணிலா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன், மாவட்ட பிரதிநிதிகள் த.முத்துமாரியப்பன், எஸ்.சண்முகம் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.